# குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

## வெளிநாட்டில் இலங்கையரின் அடையாளம்

SRI LANKA
IMMIGRATION AND EMIGRATION

## கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிப்போருக்கான அறிவுறுத்தல்கள்

(விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன் எல்லா அறிவுறுத்தல்களையும் நன்கு வாசித்து விளங்கவும்)

**(அ) K - IE 35 A விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**

(1) நீங்கள் பயண ஆவணத்தை (கடவுச்சீட்டை) பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பது, சாதாரண சேவையின் மூலமாகவா? அல்லது ஒரு நாள் சேவை மூலமாகவா? என்பதைக் குறிப்பிடவும். (உரிய கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும்)

(2) தேவையான பயண ஆவணத்தின் (கடவுச்சீட்டின்) வகை:

1. சகல நாடுகளிற்கும், [redacted]
2. அவசரகாலச் சான்றிதழ் - இந்தியா மற்றும் நேபாளம்
3. அடையாளச் சான்றிதழ் - எல்லா நாடுகளுக்கும் அல்லது குறிப்பிட்ட நாட்டுக்குச் செல்லுபடியாகக் கூடியதாகவும் வழங்கப்படும். (சம்பந்தப்பட்ட கூண்டினுள் "√" என்று குறிப்பிடவும்)

(3) நீங்கள் கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொண்டிருப்பின் கடைசியாகப் பெற்றுக்கொண்ட பிரயாண ஆவணங்களின் (கடவுச்சீட்டு, அவசரகாலச் சான்றிதழ், ஆளடையாளச் சான்றிதழ்) இலக்கத்தை இங்கு குறிப்பிடவும். இந்நாட்டில் காணாமல் போயிருந்தால் பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை அல்லது வெளிநாடு ஒன்றில் காணாமல் போயிருந்தால் இலங்கைக்கு வருவதற்காக பாவித்த தற்காலிக பிரயாண ஆவணங்களை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். (முதல் முறையாக விண்ணப்பிப்போருக்கு இது ஏற்புடைத்தாகாது)

(4) நீங்கள் இயந்திரத்தினால் வாசிக்க முடியாத (NMRP) கடவுச்சீட்டின் மூலம் வெளிநாட்டிலிருந்து இந் நாட்டிற்கு வந்திருப்பீர்களாயின். அக்கடவுச்சீட்டின் இலக்கத்தை குறிப்பிடுக. அத் தற்காலிக கடவுச்சீட்டை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(5) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிடவும். 16 வயதிற்கு மேற்பட்ட சகலரும் அடையாள அட்டையை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) உங்கள் முதற் பெயரைக் குறிப்பிடுக. (குடும்பப் பெயர்/குடிப்பெயர்) ஒரு கூண்டினுள் ஓர் எழுத்து வீதம் எழுதவும். பெயர்களுக்கிடையில் ஒரு கூட்டை வெறுமையாக விடவும். பெண் விண்ணப்பதாரி திருமணத்தின் பின்னர் தமது கணவரின் பெயரைப் பாவித்து கடவுச்சீட்டிற்காக விண்ணப்பதாயின் அப்பெயரை இங்கு குறிப்பிடவும். (இங்கு திருமண சான்றிதழை அதன் நிழற்பிரதியுடன் ஒப்படைத்தல் வேண்டும்)

(7) மேலே இலக்கம் 6 இன் கீழ் கூடுகளினுள் எழுதப்பட்ட உங்கள் முதற் பெயரை தவிர்த்து உங்கள் முழுப்பெயரையும் குறிப்பிடவும் (பிறப்புச் சான்றிதழின் 2ஆம் நிரலில் உள்ளவாறு)

(8) இலங்கையில் வசிக்கும் முகவரியைக் குறிப்பிடவும்
8.1 வசிக்கும் முகவரிக்குரிய மாவட்டத்தைக் குறிப்பிடவும்)

(9) பிறந்த திகதியைக் குறிப்பிடுக (பிறப்புச் சான்றிதழின்படி)

(10) பிறப்புச் சான்றிதழின் இலக்கத்தையும் மாவட்டத்தையும் குறிப்பிடுக (பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்)

(11) பிறந்த இடம் - பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு குறிப்பிடவும்

(12) பால் (உரிய கூண்டினுள் "√" அடையாளத்தை இடவும்)

(13) உங்களது தொழில்/தொழிற்றுறை அல்லது பதவியைக் குறிப்பிடவும் சொற்களுக்கிடையில் கூண்டொன்று இடைவெளி விடவும் (தொழிலை அத்தாட்சிப்படுத்துவதற்குத் தேவையான கல்விச் சான்றிதழ்களின்/தொழிற்றுறைச் சான்றிதழ்களின்/சேவைச் சான்றிதழிகளின் மூலப் பிரதியை நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்)

(14) நீங்கள் இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட கூடுகளினுள் "√" என்று குறிப்பிடவும். (இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருந்தால் சான்றிதழ்களின் மூலப் பிரதியை நிழற் பிரதியுடன சமர்ப்பித்தல வேண்டும்)

(15) உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

(16) உங்கள் மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரியைக் குறிப்பிடவும் (இருப்பின் மட்டும்)

(17) நீங்கள் வெளிநாட்டில் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள நாட்டைக் குறிப்பிடுக (ஏற்புடையதாயின் மட்டும்)

(18) நீங்கள் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள நாட்டின் கடவுச்சீட்டு இலக்கத்தைக் குறிப்பிடுக (அக் கடவுச்சீட்டின் நிழற் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்)

(19) 16 வயதுக்குக் குறைந்த பிள்ளையொன்றின் விண்ணப்பப் படிவமாக இருக்கும் பட்சத்தில் அப் பிள்ளையின் தந்தையின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை மற்றும் தாயின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடவும்.

(20) வழங்கப்பட்டுள்ள இரண்டு கூண்டுகளுக்குள்ளும் கூண்டுக் கோடுகளைத் தொடாதவாறு உங்களது கையொப்பத்தை இடுக

(21) விண்ணப்பதாரியின் பிரகடனத்தை வாசித்து விளங்கி கையொப்பத்தை இடவும்.

මොබිටෙල් වෙතින් අඩුම රෝමිං ගාස්තු
மொபிடெல் மூலம் ஆகக் குறைந்த ரோமிங் கட்டணங்களை அனுபவித்திடுங்கள்
Enjoy the best rates from Mobitel while you roam across the world
අමතන්න/அழையுங்கள்/Call : 1717
Sri Lanka Telecom
Mobitel

**(ஆ) கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்:**

1. விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழின் அனுமானிக்கப்பட்ட வயதுச் சான்றிதழின் மூலப் பிரதி அதன் நிழற் பிரதியுடன். விசேட சந்தர்ப்பங்களில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதிருக்கும் போது பிறப்புச் சான்றிதழ் தேடல் தொடர்பாக வெற்று பெறுபேறு ஆவணம்/பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி அதன் நிழற் பிரதியுடன்
2. தேசிய அடையாள அட்டை நிழற் பிரதியுடன்
3. திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட புகைப்பட நிலையத்தின் மூலம் தொடரறா முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படம் (Online Photo)

(*) முக்கிய குறிப்பு – கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம். கடவுச்சீட்டை விநியோகிக்கும் போது விண்ணப்பதாரியிடம் திருப்பி ஒப்படைக்கப்படுவதுடன். அவ்விண்ணப்பப் படிவத்தையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களையும் 10 வருடங்களைக் கடக்கும் வரை (கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலம் முடியும் வரை) மிகக் கவனமாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

**(இ) 16 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்காகச் சமர்பிக்க வேண்டிய ஆவணங்களும், பூர்த்தி செய்திருக்க வேண்டிய பிற தேவைகளும்.**
**16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் பெயர் பெற்றோரின் கடவுச்சீட்டுகளில் உள்ளடக்கப்படுவதில்லை என்பதுடன் பிள்ளைகளுக்கு தனித்தனியாக கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்**

(1) K-IE 35 A படிவம்

(2) பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி (நிழற்பட பிரதியுடன்) - ஆங்கில மொழிபெயர்ப்பு பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

(3) பெற்றோரின் கடவுச்சீட்டுக்களின் தரவுகள் பதியப்பட்டுள்ள பக்கங்களின் நிழற்பிரதிகளுடன். பிள்ளைகளின் பெயர்களை உட்சேர்க்கும் பக்கங்களின் (8,9 ஆம் பக்கங்கள்) நிழற் பிரதிகளுடனும் பெற்றோரின் கடவுச்சீட்டுக்கள்

(4) பெற்றோர் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டில்லையெனில். [redacted]
பெற்றோரின் தேசிய அடையாள அட்டைகளுடன் அவற்றின் நிழற் பிரதிகள்

(5) பிள்ளைக்கு/பிள்ளைகளுக்கு கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பது தொடர்பில் பெற்றோரின் விருப்பத்தைத் தெரிவிக்கும் கடிதங்கள் (தாய் அல்லது தந்தை அல்லது இருவரும் வெளிநாட்டில் இருப்பின். அவர்களது விருப்பத்தைத் தெரிவிக்கும் கடிதங்களை. குறித்த நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதுவராலயத்தின்/உயர் ஸ்தானிகராலயத்தின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) தாய் அல்லது தந்தை காலஞ் சென்றிருப்பின் மரணச் சான்றிதழை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(7) பெற்றோர் விவாகரத்து செய்திருப்பின் விவாகரத்துச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை. அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(8) பிள்ளைக்கு தனியான கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்கு முன் அப்பிள்ளைகள் தங்கள் தாய் அல்லது தகப்பனின் செல்லுபடியான கடவுச்சீட்டில் உட்சேர்க்கப்பட்டிருப்பின். அதனை முதலில் நீக்கிக் கொள்ள வேண்டும் என்பதுடன். இதற்காக IE 35'சீ' படிவத்தினை பூர்த்திசெய்து ரூபா 1,200.00 கட்டணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்

(9) பிள்ளைகள் வெளிநாடொன்றில் பிறந்திருப்பின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை குடியுரிமைச் சான்றிதழை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(10) கடவுச்சீட்டிற்காக விண்ணப்பத்தை ஒப்படைப்பதற்காக தாய் தந்தை இருவரும் (பெற்றோர்) சமூகமளித்தல் வேண்டும்.

**(ஈ) கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளும் போது கீழ்க் காணும் குற்றங்களை இழைப்பது , 1955 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1961 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1993 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1998 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2006 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2015 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் குடியகல்வோர் சட்டத்திற்கமைய தண்டைக்குரிய குற்றங்களாகும்.**

(1) பொய்யான தகவல்களை வழங்குதல்
(2) மோசடியாகத் தயாரிக்கப்பட்ட அல்லது போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்தல்
(3) செல்லுபடியான கடவுச்சீட்டொன்றை தம்வசம் வைத்துக் கொண்டு இன்னொரு கடவுச்சீட்டிற்காக விண்ணப்பித்தல்
(4) வேறொருவரின் கடவுச்சீட்டை பாவித்தல்
(5) பெற்றுக் கொள்ளப்பட்ட கடவுச்சீட்டில் போலியாக மாற்றங்களைச் செய்தல்
(6) பிற நபரொருவரின் ஆவணங்களைச் சமர்ப்பித்து. கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளல்.

**(உ) கடவுச்சீட்டொன்று காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் கீழ்க் காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

(i) கடவுச்சீட்டு காணாமல் போனமை பற்றி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைபாட்டின் மூலப்பிரதி
(கடைசியாகப் பெற்றுக் கொண்ட கடவுச்சீட்டின் இலக்கத்துடன்)

(ii) கடவுச்சீட்டு வெளிநாடொன்றில் காணாமல் போயிருப்பின் அந்நாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தின் மூலம் இலங்கைக்கு வருவதற்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக பயண ஆவணம் அதன் நிழற் பிரதியுடன்

(iii) விநியோகிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் காணாமல் போன கடவுச்சீட்டுக்காக - கடவுச்சீட்டிற்கான கட்டணத்திற்கு மேலதிகமாக தண்டப் பணமாக ஷரூ. 20,000.00 விநியோகிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்குள் காணாமல் போன கடவுச்சீட்டுக்காக - கடவுச்சீட்டிற்கான கட்டணத்திற்கு மேலதிகமாக தண்டப் பணமாக ஷரூ. 15,000.00. (காணாமல் போன கடவுச்சீட்டின் உரிய செல்லுபடிக் காலம் கடந்தில்லாதிருப்பின் மட்டுமே இத் தண்டப் பணம் அறவிடப்படுகின்றது).

**(ஊ) அறிவிடப்படுகின்ற கட்டணங்கள்**

| | | | | 16 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்காக 3 வருட காலப்பகுதிக்கு | |
|---|---|---|---|---|---|
| | | **ஒருநாள் சேவை** | **சாதாரண சேவை** | **ஒருநாள் சேவை** | **சாதாரண சேவை** |
| (i) | சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டு | ரூ. 20,000.00 | ரூ.10,000.00 | ரூ. 9,000.00 | ரூ. 3,000.00 |
| | | | | | |
| (ii) | இந்தியா மற்றும் நேபாளம் ஆகியவற்றுக்கான அவசரகால சான்றிதழ் | – | ரூ. 500.00 | – | – |
| | | | | | |
| (இலங்கை அரசின் தீர்மானங்களுக்கமைய இக் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட இடமுண்டு) | | | | | |

**(எ) சங்கைக்குரிய பௌத்த பிக்குகளுக்கு கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தல்**

i. பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியையும். தேசிய அடையாள அட்டையையும் அவற்றின் நிழற் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. பிக்கு சான்றிதழை (சாமனேர சான்றிதழை) அல்லது பிக்கு பட்டமளிப்பு சான்றிதழை (உபசம்பதா சான்றிதழ்) அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்

**(ஏ) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல்**

| | |
|---|---|
| ஒருநாள் சேவை | : மு.ப 7.00 - பி.ப 1.00 மணி வரை |
| சாதாரண சேவை | : மு.ப 8.00 - பி.ப 1.00 மணி வரை |

කොළඹ ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුවේ මොබිටෙල් විශේෂ ශාඛාව වෙත පැමිණෙන්න.
கொழும்பு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திலுள்ள எமது மொபிடெலின் விசேட கிளைக்கு விஜயஞ்செய்யுங்கள்.
Visit us at the Mobitel Special Branch, Department of Immigration & Emigration, Colombo.
Sri Lanka Telecom
mobitel